Registered as a Newspaper

புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர்செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு வைகாசி மீ 20 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 5 (03 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 161

# யாழ் தொலைத்தொடர்பு நிலைய இராணுவ முகாம் மீது இன்று அதிகாலை புலிகள் அதிரடிப் பாய்ச்சல்!

## பல இராணுவம் பலி; பலர் சிறைப்பிடிப்பு; பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

— எம்-பேரின்பநாயகம் —

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலையத்தில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா அரசு படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று அதிகாலை 1.00 மணிக்கு வெற்றிகரமாக அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலின் போது மூன்றுக்கும் அதிகமான ஸ்ரீலங்கா சிப்பாய்கள் விடுதலைப் புலிகளினால் சிறைப் பிடிக்கப்பட்டனர். பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

பத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகளின் யாழ் தலைமையகத்தில் இன்று அதிகாலை தெரிவிக்கப்பட்டது.

இந்த வெற்றிகரத் தாக்குதல் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகளின் தரப்பில் சிலர் வீரமரணமடைந்ததாகவும், சிலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

திடீர் தாக்குதலினால் நிலைகுலைந்த சிப்பாய்கள் முகாமை விட்டு நாலாபுறமும் சிதறி ஓடியதாகவும், அவ்வேளையில் அவர்களில் சிலர் புலிகளிடம் சிக்கிக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

தாக்குதல் வேளையில் எழுந்த குண்டு மற்றும் வேட்டுச் சத்தங்களினால் நகர் அதிர்ந்தது.

இந்தத் தாக்குதலை புலிகள் நடத்திய கையோடு யாழ் கோட்டை முகாமிலிருந்த படையினர் நகரை நோக்கி நாலாபுறமும் கண் மூடித்தனமான முறையில் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அந்தக் கையோடு நகரின் மீது வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஒன்று நகர் மீது 50 கலிபர் மற்றும் ரொக்கட் தாக்குதல்களை நடத்தியது. குண்டுகளும் வீசப்பட்டன.

இன்று காலை ஆறுமணிவரை புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்ட சிப்பாய்களைத்தேடி நகரின் மீது ஹெலிக்கொப்டர் ஒன்று விடாமல் வட்டமிட்ட வண்ணம் இருந்தது.

இந்தச் செய்தி எழுதப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலும் நகரின் மீது கோட்டை முகாமிலிருந்தும், ஹெலியிலிருந்தும் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. (உ)

# திட்டமிட்டபடி படகுகள் காலை புறப்பாடு

முச்சந்தி முனி

# சுடப்போவதாக ஸ்ரீலங்கா கடற்படை எச்சரிக்கை



ஆரம்பமே இப்பிடி எண்டால் முடிவு எப்படி இருக்கும்?

### இந்திய படகுகளுக்கு என்ன நடக்கும்?

கொழும்பு, ஜூன் 3

உணவுப் பொருள்களுடன் வரும் இந்தியப் படகுகளுக்கு ஆயுதரீதியிலான எதிர்ப்பைக் காட்டும் சாத்தியம் இல்லை.

— இப்படி கொழும்பில் வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர் ஒருவர் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார். (இ-எ)

## நாட்டைப் பாதுகாக்க ஜே.ஆர். உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு, இருபது இந்தியப் படகுகள் திட்டமிட்டபடி இன்று புதன்கிழமை காலை புறப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதே வேளை நிவாரணப் பொருள்களை ஏற்றி வரும் படகுகள் மீது தாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்போவதாக ஸ்ரீலங்கா கடற்படை எச்சரித்துள்ளது.

ஸ்ரீலங்காவையும், அதன் கடற்பகுதியையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்குமாறு, ஜனாதிபதி ஜெயவர்த்தன முப்படைத் தளபதிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும், ஸ்ரீலங்காவுக்கும் இடையேயான லடாய் இப்போது ஆரம்பித்து விட்டதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

யாழ் குடாநாட்டுக்கு அனுப்பப்படும் நிவாரண உணவு, மருந்து மற்றும் பொருள்களை படகுகளில் ஏற்றும் வேலைகள் நேற்றுப் பகல் இராமேஸ்வரம் துறைமுகத்தில் ஆரம்பமாகின.

''எத்தனை மணிக்கு சரியாக இராமேஸ்வரத்தில் இருந்து படகுகள் அணிபுறப்படும்?'' என்று வெளியுறவு அமைச்சு அதிகாரியிடம் கேட்கப்பட்டபோது—

பொருள்கள் ஏற்றப்பட்டவுடன் படகுகள் அணி புறப்படும். எத்தனை மணிக்கு என்று சரியாகச் சொல்ல முடியாது. எப்படியும் புதன்கிழமை புறப்படும்''— என்று அந்த அதிகாரி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதே வேளை—

நிவாரணப் பொருள்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய உதவியை பிரபா வரவேற்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் தமிழீழ மக்களுக்கு குறிப்பாக வடமராட்சி மக்களுக்கு நேரடி நிவாரணம் வழங்க இந்தியா எடுத்திருக்கும் முயற்சியை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரன் வரவேற்றிருக்கிறார்.

உதவி வழங்குவதற்காக எமது மண்ணுக்கு வந்து சேரும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், மருத்துவக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் முழு ஒத்துழைப்பு வழங்குகிறோம்.

இந்த உதவியை வழங்கும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இவ்வாறு திரு. பிரபாகரன் விடுத்த செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-10)

## ஈரோஸ் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 3

இந்திய அரசு, மனிதாபிமான அடிப்படையில் யாழ்குடா நாட்டு மக்களுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது மகிழ்ச்சிக்குரிய விடயமே. இன்றைய நிலையில் குடா நாட்டு மக்களுக்கு இது ஒரு பேருதவியாக அமையும்.

இவ்வாறு ஈரோஸ் பிரமுகர் ஒருவர் நேற்று உதயனிடம் தெரிவித்தார்.

ஈரோஸ் பேச்சாளர் பாலகுமார் ஏற்கனவே இது சம்பந்தமான வேண்டுகோளை இந்திய அரசிடம் விடுத்திருந்தார் என்பது தெரிந்ததே. (இ-எ)

## மனிதாபிமான உதவி ஆதிபத்திய உரிமையை எப்படிப் பாதிக்கும்?

புதுடில்லி, ஜூன் 2

மனிதாபிமான அடிப்படையில் அனுப்பப்படும் நிவாரண உதவி எப்படி ஒரு நாட்டின் ஆதிபத்திய உரிமையைப் பாதிக்கும்?

இப்படி புதுடில்லி அரசு வியப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி கடந்த திங்கள் இரவு ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில்;

''இந்தியாவின் நிவாரண உதவிகளை அனுப்பும் முடிவு இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் செயல் என்பது தெளிவாகத் தெரிகிறது; இம்முடிவு நட்பு நடவடிக்கை அல்ல''—என்று கருத்து வெளியிட்டிருந்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## விளைவுகளை இலங்கையே ஏற்க வேண்டும்

### எம். ஜி. ஆர். எச்சரிக்கிறார்



எம். ஜி. ஆர்.

சென்னை, ஜூன் 3

பாக்கு நீரிணையில் மீன்பிடிப்பதில் ஈடுபடும் இந்திய மீனவர்களை அச்சுறுத்துவதை இலங்கைக் கடற்படை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்தும் அச்சுறுத்தல் இடம்பெற்றால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு இலங்கை அரசே பொறுப்பு ஏற்கவேண்டி நேரிடும்.

இப்படி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

பாக்கு நீரிணையில் தமிழ் நாடு மீனவர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்களின் ''ஸ்ரீ லங்கா ஜெயவேவா''

யாழ்ப்பாணம், ஜூன் 3

மந்திகை ஆஸ்பத்திரியில் பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்த பெண் ஒருவரை சிப்பாய்கள் வாகனம் ஒன்றில் ஏற்றி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

கர்ப்பிணிப் பெண்ணை ஏற்றிவந்த இந்த வாகனத்தில் ''ஸ்ரீ லங்கா ஜெயவேவா'' என்று சிப்பாய்களால் எழுதப்பட்டிருந்தது.

இந்தப் பெண்ணுடன் ஒரு சிறுவனும் வாகனத்தில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தான்.

இந்தப் பெண்ணை அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவே சிப்பாய்கள் முதலில் முயன்றனர். இப்பெண் அனு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆபத்துக்களைப் பற்றி இந்தியா சிந்தித்துப் பார்க்க வேண்டும்

### பிரேமா கூறுகிறார்

தன்னிச்சையாக நிவாரண உதவிகளை யாழ் மக்களுக்கு வழங்குவதில் உள்ள ஆபத்துக்களை இந்தியா சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

-இப்படி பிரதமர் ஆர். பிரேமதாஸா நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்திய அரசு எதிர் நோக்கும் ஆபத்துக்கள் பற்றி பிரதமர் தனது பேச்சில் விவரித்தார்.

★ தற்சமயம் தோல்வியடைந்து வரும் தீவிரவாதிகள் உணவு கொண்டு வரும் இந்தியப் படகொன்றின் மீது சுட்டுவிட்டு பழியை இலங்கை அரசின் மீது போடலாம் அல்லவா?

★ உணவுப் பொருள்கள் கொண்டு வரும் படகுகளில் இந்திய இராணு

(2 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

03-06-1987
புதன்கிழமை
சுபநேரம்:-
4.22 முதல் 5.52 வரை
ராகுகாலம்:-
11.52 முதல் 1-22 வரை.
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## வடமராட்சிப் பகுதியில் 1,300 இளைஞர்கள் கைது

— உதயன் வல்வைச் செய்தியாளர்:- சி. சுந்தரலிங்கம் —

கடந்த வாரம் வடமராட்சியில் விமானங்கள் நடத்திய குண்டு, பீப்பாய்க் குண்டுத் தாக்குதல்களில் சுமார் நூறு கடைகளும் 300 வீடுகளும் [illegible] மடைந்தன.

இருபதாயிரம் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

15 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட சுமார் ஆயிரத்து 300 இளைஞர்கள் [illegible] யப்பட்டு பாடசாலைகளிலும் முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள்

தமது தரப்பில் 13 பேர் மட்டுமே கொல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சரவையில் முடிவில்லை

கொழும்பு, ஜூன் 3

நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் விசேட கூட்டத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்திய அரசுக்கு எதிராக கடும் போக்கை கடைப்பிடித்ததாக அறிவிக்கப்படுகிறது.

நிவாரணப் பொருள்கள் அனுப்பும் இந்திய அரசின் முடிவு பற்றி ஆராய இவ் விசேட கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. (உ-எ)

✯✯✯✯✯✯
இன்று மாலை
உதயனின்
விசேட பதிப்பு
விவரமான
செய்திகளுடன்
வெளியாகும்
✯✯✯✯✯✯

## இலங்கைத் தூதர் ஐ நா. பொதுச் செயலாளரை அவசரமாகச் சந்தித்தார்

வாஷிங்டன், ஜூன் 3

வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதர் கடந்த திங்கட்கிழமை ஐ.நா. பொதுச் செயலாளரை அவசரமாகச் சந்தித்தார்.

யாழ் குடா தமிழருக்கு நிவாரண உணவுப் பொருள்களை அனுப்புவது என்று இந்திய அரசு தன்னிச்சையாக எடுத்த முடிவு குறித்து இலங்கை அரசின் நிலையை ஐ. நா பொதுச் செயலாளருக்கு எடுத்து விளக்குவதில் இலங்கைத் தூதர் ஈடுபட்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## உலக திருச்சபைகள் கவுன்ஸில் வரவேற்பு

லண்டன், ஜூன் 3

யாழ் குடாநாட்டு மக்களுக்கு நிவாரண உதவிகளை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் மூலம் விநியோகிக்க இந்திய அரசு தீர்மானித்திருப்பதை உலக திருச்சபைகள் கவுன்ஸில் வரவேற்றுள்ளது.

கவுன்ஸிலின் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை பி.பி.சியின் ஜெனீவா செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்திய அரசைப் பின்பற்றி உலகில் உள்ள

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் பலர் கைது

வல்வெட்டித்துறை, ஜூன் 3

நேற்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்த பகல் நேரத்திலும் பெருந்தொகையான வல்வெட்டித்துறை மக்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக் காலை வல்வெட்டித்துறை, கம்பர்மலை, தேருவில், நெடியகாடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றனர்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் காணப்பட்ட சிப்பாய்கள் இவர்களில் பலரைக் கைது செய்தனர். (உ-ள-160)

## 29 பிக்குகள் உட்பட 33 பேர் கொலை!

கிழக்கு மாகாணத்தில் பஸ் ஒன்றின் மீது இனந்தெரியாத கோஷ்டி ஒன்று நடத்திய தாக்குதலில் 33 பயணிகள் உயிரிழந்தனர்.

இவர்களில் 29 பேர் பௌத்த பிக்குகள்.

அம்பாறை மாவட்டத்தில் அரந்தலாவ என்னுமிடத்தில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

பயணிகள் அனைவரும் காட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டு சுடப்பட்டனர். உயிரிழந்த 33 பேரில் நான்கு பேர் மட்டுமே பொதுமக்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய கலைமகளின் இதயம் கவரும் [illegible]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## காலத்தால் செய்யும் உதவி

இராமேஸ்வரத்திலிருந்து இருபது படகுகள் இன்று யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட ஏற்பாடாகி இருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அட்டூழியங்களால், மனிதாபிமான மற்ற தடைகளால்உயிருக்கும், உணவுக்கும் கஷ்டப்படும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு உணவு, எரிபொருள், மருந்து ஆகிய நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு அவை இங்கே வரவுள்ளன.

பக்கத்து வீட்டுக்காரன் பசியால் வாடும் போதும், அவனுக்கு உயிராபத்து உண்டாகி இருக்கும் போதும் முறையே அவனுக்கு உணவும், வைத்திய வசதியும் வழங்குவது மனிதாபிமானத்தின் பாற்பட்டது. இரக்க சிந்தையின் பாற்பட்டது. அது போன்றதே இந்தியாவின் உதவியும் ஆகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் யாழ். குடாநாட்டு மக்களுக்கு எதிராக எரிபொருள் தடை, தொலைத்தொடர்பு தடை என்பவற்றைக் கொண்டு வந்து ஐந்து மாதங்கள் முடிந்து விட்டன. வெளிமாவட்டங்களில் இருந்து வரும் உணவுப் பொருள்களைத் தடை செய்யும் விதத்தில் வாகனப் போக்குவரத்தை அடிக்கடி அரசின் கூலிப்பட்டாளங்கள் தடுத்து வருகின்றன.

அயல்நாடு என்ற வகையிலும், இனப்பிரச்சினை மத்தியஸ்தன் என்ற வகையிலும் இந்தத் தடைகளை நீக்குமாறு இந்தியா பல தடவைகள் பண்பாகக் கேட்டது.

ஸ்ரீலங்கா அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை. பதிலாக இராணுவ நடவடிக்கை மேற்கொண்டு ஆயிரக்கணக்கான குடிமக்களைப் பச்சைக் கொலை செய்திருக்கிறது. அரச படைகளின் அடாவடித்தனங்களால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் சொத்திழந்து, சுகம் இழந்து, குந்தியிருக்க இடமின்றி, ஒரு நேர உணவுக்கு வழியின்றி தங்கள் சொந்தத் தாய் மண்ணில் அகதிகளாக நாட்களைக் கழிக்கிறார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்தியாவின் உதவி காலத்தால் செய்த உதவியாகும். மனித நேயமுள்ள எவரும் செய்ய விரும்பும், செய்ய வேண்டிய உதவியாகும்.

இந்தியா வழங்கும் உதவியை ஆவலோடும் ஆர்வத்தோடும் வாங்குவதற்கு யாழ்ப்பாண மக்கள் காத்திருக்கிறார்கள்.

அப்படியிருக்க ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது ஆதிபத்தியத்தில் இந்தியா கைவைப்பதாகக் கூறுவது நியாயத்திற்கு நின்று பிடிக்காது. இதுவரை காலமும் தமிழ் மக்களை தனது மக்களாகக் கருதியா ஸ்ரீலங்கா அரசு அவர்களுக்கு எதிராக இத்தனை அட்டூழியங்களையும் புரிந்து வந்தது? வருகிறது?

யாழ்ப்பாண மக்களைப் பற்றிக் கவலையில்லை என்று கூறியவர்கள், அயலார் உதவும் போது அதனை எப்படித் தடுக்க முடியும்?

தமிழக அரசு தனது நிவாரண உதவியை உடனடியாக அனுப்ப வேண்டும் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்பத்தியில் வலியுறுத்தி இருந்தோம்.

காலமறிந்து செய்யும் உதவிக்கு யாழ்ப்பாண மக்கள் என்றென்றும் இந்தியாவுக்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

# இந்திய நடவடிக்கைக்கு முற்றாக எதிர்ப்பு

## 2 ஆவது கடிதத்தில் இலங்கை

கொழும்பு, ஜூன் 3

இந்திய அரசு தன்னிச்சையான முறையில் யாழ் தமிழருக்கு உணவுப் பொருள்கள் அனுப்புவதை இலங்கை அரசு முற்றாக எதிர்க்கின்றது.

இந்தியாவுக்கு அனுப்பிய இரண்டாவது பதிலில் இலங்கைஅரசு இப்படித் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் முதலாவது பதிலுக்கு நன்றி தெரிவித்து இந்தியா நேற்று கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தது.

அக்கடிதத்துக்கு அனுப்பிய பதிலிலேயே மேற்கண்டவாறு இலங்கை அரசு தெரிவித்தது.

இரண்டாவது பதிலை நேற்று வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது இந்தியத் தூதரிடம் கையளித்தார்.

இந்தியாவின் நன்றி தெரிவிக்கும் கடிதத்தில் ''நல்லுறவு மனப்பான்மையுடன் மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தியாவின் நடவடிக்கையில் கலந்து கொள்ள இலங்கை இணக்கம்தெரிவித்ததற்கு இந்திய அரசு நன்றி தெரிவிக்கின்றது'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கான இலங்கை அரசின் பதில் வருமாறு:

இலங்கையின் முதலாவது பதிலை இந்தியா தவருகப் புரிந்து கொண்டது ஆச்சரியத்தைத் தருகின்றது.

இரண்டு அரசுகளும் இணைந்து வகுக்கும்திட்டத்தின் கீழே தான் நிவாரணம் விநியோகிக்கப்பட வேண்டும் என்று இலங்கை தனது முதல் பதிலில் தெரிவித்து இருந்தது.

இந்திய அரசு நேரடியாக ஆட்களையும் பொருள்களையும் யாழ் குடாவுக்கு அனுப்பி வைக்க இலங்கை அரசு சம்மதம் தெரிவிக்கவில்லை.

இலங்கை வெளிநாட்டு உதவியைக் கேட்கவும் இல்லை.

தன்னிச்சையாக இந்திய அரசு அனுப்பி வைப்பது இலங்கையின் சுதந்திரம், இறைமை, பிராந்திய ஒற்றுமை ஆகியவற்றை மீறுவதாகும்.

இப்படி இலங்கை அரசின் இரண்டாவது பதில் அமைந்துள்ளது. (இ-எ)

## இந்திய மாநிலங்கள் போட்டி போட்டு தமிழருக்கு உதவி

புதுடில்லி, ஜூன் 3

யாழ் குடாநாட்டுத் தமிழருக்கு நிவாரண உதவிகளை அனுப்புவதற்கு இந்தியாவில் உள்ள மாநில அரசுகள் போட்டி போட்டுக் கொண்டு நிதி ஒதுக்குகின்றன.

ஆந்திர மாநில அரசு நேற்று ஐம்பது லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

முடிவை முதலமைச்சர் என். ரி. ராமராவ் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மகராஷ்டிரா அரசு ஒன்றேகால் கோடி ரூபா ஒதுக்கியுள்ளதாக முதல் அமைச்சர் எஸ். பி. சவான் அறிவித்தார்.

மத்திய பிரதேச மாநில அரசு ஏற்கனவே ஐம்பது லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநில அரசு ஒன்றரைக் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இத்தகவலை மாநில முதலமைச்சர் வீர் பகதூர் சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனிடையில் வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரி தமிழர் நிவாரண உதவிக்கு நிதி ஒதுக்கும்படி மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசுவை தொலைபேசி மூலம் கேட்டிருக்கிறார். (இ-எ)

## விளைவுகளை......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடற்படையினரால்தாக்கப்படுவது, சுட்டுக் கொல்லப்படுவது ஆகிய சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து முதலமைச்சர் கடந்த திங்கள் அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அந்த அறிக்கையில் தான் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் தங்கள் படகுகளில் ஆயுதங்களைக் கடத்திக் கொண்டு வந்து தமிழ்ப் போராளிகளுக்கு உதவுகின்றார்கள் என்று கூறும் துண்டுப் பிரசுரங்களை இலங்கைக் கடற்படையினர் விநியோகித்து வருகின்றார்கள்.

எனது அரசு போராளிகளுக்கு ஆயுதம் வழங்குகின்றது என்று இலங்கை அரசு குற்றம்சாட்டுகிறது. இது தவறு.

மனிதாபிமான முறையில், பாதிக்கப்பட்ட தமிழருக்கு உதவவே எனது அரசு நிதி ஒதுக்கியது.

இதைத் தவருகப் புரிந்து கொண்டு வீண் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதை இலங்கை அரசு உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இரு நாடுகளுக்கும் இடையே உள்ள உடன்பாட்டின்படி இலங்கைக் கடலிலும் மீன் பிடிக்கும் உரிமை இந்திய மீனவருக்கு உண்டு.

இப்படி முதலமைச்சர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

## மனிதாபிமான...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இது பற்றி அபிப்பிராயம் வெளியிடுகையிலேயே புதுடில்லி அரசுப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிவாரண உதவிகள் அவசரமாக யாழ்குடா தமிழருக்குத் தேவைப்படுகின்றன. அவற்றை அனுப்பிவைப்பதில் தாமதமே காட்டப்படக் கூடாது —இப்படியும் அந்த அரசுப்பேச்சாளர் கருத்து வெளியிட்டார். (இ-எ)

## வதந்தியால் பதற்றம்

வட்டுக்கோட்டை, ஜூன் 3

காரைநகரில் இருந்து வந்த ஹெலி ஒன்று தொல்புரம் மடத்துப் பிள்ளையார் கோவிலடியில் தரை இறங்கி விட்டதாக ஞாயிறு மாலை பரவிய வதந்தியால் வட்டுக்கோட்டை, கலைநகர், பிளவத்தை, சித்தன்கேணி ஆகிய கிராமங்களில் பதற்றம் நிலவியது.

ஒரு மணிநேரம் கழிந்தே உண்மை நிலை தெரிய வந்து பதற்றம் அடங்கியது. (இ-161)

## ஆபத்துக்களை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் வருகிறது என்று மக்கள் ஆத்திரம் கொண்டால் என்ன செய்வது?

இது போன்ற விளைவுகளை இந்தியா சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம்வெற்றி அடைந்து வருகிறோம். சமாதானம், நட்பை விரும்புபவர்கள் எமக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது.

—இப்படி பிரதமர் தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா பேசுகையில் கூறியதாவது:-

எந்த நாட்டின் தலையீட்டையும் சுதந்திரக் கட்சி எதிர்க்கின்றது. நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதில் சுதந்திரக் கட்சி, அரசுடன் வேறுபாடு இன்றிப் போராடும்''— என்று சொன்னார். (உ-எ)

## உலக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் பாதிக்கப்பட்டுள்ள யாழ் குடா தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும் என்றும் உலகதிருச்சபைகள் கவுன்ஸில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இலங்கை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டார் என்று பி. பி. சி. தெரிவித்தது.

மோசமடைந்து வரும் இந்திய- இலங்கை இராஜதந்திர உறவுகளின் மத்தியில் நடந்த இச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கணிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்திய மத்தியஸ்தத்தைக் கைவிட்டு இனப்பிரச்சினைக்கு ஐ.நா. வின் உதவியை நாடுவது என்று இலங்கை தீர்மானித்துள்ளதா?

இந்தக் கேள்வியும் எழுந்துள்ளது. (இ-எ)

## ஜே. ஆர். ஆலோசனை

கொழும்பு, ஜூன் 3

எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவுடன் ஜனாதிபதி ஜெயவர்த்தன திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் அவசர ஆலோசனைகள் நடத்தினர்.

## திட்டமிட்டபடி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை வழங்கும் திட்டத்துக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கும்படி இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும்படி இந்திய அரசு, ஏனைய நாடுகளை நேற்றுக் கேட்டுக்கொண்டது.

புதுடில்லியில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களை அழைத்து இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

### ஸ்ரீலங்கா எச்சரிக்கை

நிவாரண உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ் செல்லும் இந்தியப் படகுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்போவதாக இலங்கைக் கடற்படையினர் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து இந்திய அரசு வியப்புத் தெரிவித்துள்ளது.

இத்தகவலை இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் நேற்று மாலை புதுடில்லியில் வெளியிட்டார்.

மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களிடம் இலங்கை கடற்படையினர் விநியோகித்த துண்டுப் பிரசுரங்கள் இலங்கைக் கடற்படை அதிகாரிகளின் எச்சரிக்கையைத் தெளிவுபடுத்துபவையாக இருக்கக் காணப்பட்டன. இந்த எச்சரிக்கை குறித்து இந்திய அரசு ஆழ்ந்த கவலையும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம்வருவதற்காக இந்திய,வெளிநாட்டுச் செய்தியாளர்கள் 94 பேர், வைத்திய அதிகாரிகள், செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் கொண்ட கோஷ்டி நேற்று விசேட விமானம் மூலம் புதுடில்லியில் இருந்து மதுரை வந்து சேர்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

### வைத்தியர் கோஷ்டி

டாக்டர் எம். எல். குப்தா தலைமையில் ஆறு இந்திய செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களும் புதுடில்லி சப்தர் ஜிங் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த எட்டு வைத்திய நிபுணர்களும் இக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

வைத்திய நிபுணர்கள் குழுவுக்குத் தலைமை வகிக்கும் டாக்டர் மோஹந்தி சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கியவுடன் ''உயிர் காக்கும் மாத்திரைகள் உட்பட பதினைந்து தினங்களுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்து வகைகளுடன் செல்கிறோம். சத்திர சிகிச்சை செய்யக் கூடிய வசதிகளையும் கொண்டு செல்கிறோம்'' என்றார். (அ-எ)

## சிப்பாய்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ராதபுரம் செல்ல பிடிவாதமாக மறுத்ததை அடுத்தே, சிப்பாய்களால் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (இ-10)

## வடமராட்சிப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டதாகவும், 80க்கும் அதிகமான சிப்பாய்கள் பலியானதாகவும் போராளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட பொதுமக்களின் சடலங்கள் வீதிகளில் ஆங்காங்கே கிடந்து நாறின.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரத்தில் பிரேதங்களை பொதுமக்கள் அப்புறப் படுத்தினர்.

மந்திகை ஆஸ்பத்திரியை சிப்பாய்கள் முற்றுகையிட்டுள்ளதால் காயமடைந்தவர்களை அங்கே கொண்டு செல்ல பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

ஆஸ்பத்திரியில் அகதிகளாக தஞ்சமடைந்தோரை சிப்பாய்கள் அப்புறப்படுத்தியுள்ளனர்.

### அம்மன் ஆலயத்தில் படுகொலை

அரச படைகள் நடத்திய தாக்குதலில் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தவர்களில் 75 பேரும் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் 29 ஆம் திகதி நடைபெற்றது.

வடமராட்சியில் அரசு படைகள் நடத்திய தாக்குதலின்போது தம்பசிட்டி, வியாபாரிமூலை, பொலிகண்டி, திக்கம் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் தமது பாதுகாப்புக்காக அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர்.

வானொலி, துண்டுப் பிரசுரங்கள் மூலம் இந்த ஆலயத்தில் மக்களை ஒதுங்கும்படி படையினர் கேட்டிருந்தனர்.

ஆலயத்துள் மக்கள் ஒதுங்கியிருந்த போது 3 ஹெலிகள் ஆலயத்தின் மீது திடீர் தாக்குதல்களை மேற் கொண்டன.

ஹெலிகள் நடத்திய கலிபர், ஷெல் தாக்குதல்களில் 75 பேர்வரை கொல்லப்பட்டனர். 100 பேர்வரை படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களை பலத்த சிரமத்தின் மத்தியில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

பிரேதங்கள் எடுத்துச் செல்ல முடியாத நிலையில் அங்கங்கே வைத்து எரிக்கப்பட்டன. (உ-எ-160)

## 'டாஸ்' நிறுவனம் கருத்து

மாஸ்கோ, ஜூன் 3

அப்பாவித் தமிழர்கள் மீது கண்மூடித்தனமான முறையில் விமானக் குண்டுத் தாக்குதலை இலங்கை அரசு நடத்தியது.

இதன் காரணமாகத் தான் யாழ். தமிழருக்கு மனிதாபிமான அடிப்படையில் நிவாரண உதவிப் பொருள்களைக் கப்பல்களில் அனுப்ப இந்தியப் பிரதமர் தீர்மானித்தார்.

இப்படி டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இத்தகவல் நேற்று சோவியத் வானொலியில் ஒலிபரப்பானது: (இ-எ)

## மீண்டும் திரும்பிய லொறிகள்

உணவுப் பொருள்களை ஏற்றி வருவதற்காக காங்கேசன்துறை உணவுக் களஞ்சியம் நோக்கிப் புறப்பட்ட ப. நோ. கூ. சங்க லொறிகள் நேற்றும் வெறுமனே திரும்பி வந்தன.

லொறிகளில் உணவுப் பொருள்களை ஏற்றுவதற்கு அங்கு தொழிலாளர்கள் செல்லாததே இதற்குக் காரணம்.

## உடன் தலையிட கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஜூன் 3

உடனடியாகத் தலையிட்டு இலங்கைத் தமிழரைக் காப்பாற்றும்படி தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பிரதமர் ராஜீவ் காந்திக்கு அவசரத் தந்தி ஒன்றை நேற்று அனுப்பிவைத்தார்.

இதனிடையில் நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கு பிரதமர் நடவடிக்கை எடுத்துள்ளதை திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி பாராட்டி இருக்கிறார். (உ-எ)

## இடம் மாற்றம்

17/1 சின்னக்கடை வீதி, குருநகரில் உள்ள சிவலிங்கம் வைத்தியசாலை நோயாளரின் பாதுகாப்பு கருதி தற்காலிகமாக 27, அடப்பன் ரோட், குருநகர் என்ற இடத்திற்கு இடம்மாற்றம் செய்யப் பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

(ஓடைக்கரை வீதியும் அடப்பன் வீதியும் சந்திக்கும் இடத்தில்)

(1408)

சின்னஞ்சிறு விளம்பரம்

## அறிவித்தல்

நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைகட்காகத் தரப்பட்ட சகல மணிக்கூடுகளையும் இன்றுதொடக்கம் 9 மணிக்கும் 01 மணிக்கும் இடையில் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 6,இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(1405)



AVAILABLE
Typewriters
New English Portables:
OLYMPIA — OPTIMA
Etc.

Used Typewriters:
STANDARD - PORTABLES
(One Year Gurantee & Free Service)

WE UNDERTAKE
TYPEWRITERS REPAIRS
& SERVICE.

Contact:
FUDO ENTERPRISES,
Jaffna Road,
MANIPAY.
(Near Bank of Ceylon)

# பிரயாண ஒழுங்குகள்

## குவைத்

மேற்படி பிரயாண ஒழுங்கு சம்பந்தமான நேர்முகப் பரீட்சைகள் யாவும் நாட்டின் போக்குவரத்துச் சீரின்மை காரணமாக யாபேருக்கும் யாழ்ப்பாணத்தில் நடக்க இருப்பதால் 02-06-1987 முதல் 15.06-1987 வரை கீழ்க்குறிப்பிடும் ஆவணங்களுடன் சமூகம் கொடுக்கவும்.

(1) புகைப்படம் ஒன்று
(2) தகைமைச் சான்றிதழ்
(3) வெளிநாட்டில் வேலை செய்தவராயின் கம்பனி வழங்கிய சான்றிதழ்
(4) தொழில் நுட்ப சான்றிதழ்
(5) சாரதிமார் I. சர்வதேச வாகன அனுமதிப்பத்திரம் (International Driving Licence)
II. உள்ளூர் வாகன அனுமதிப்பத்திரம்
இவற்றிற்கான போட்டோ பிரதிகளுடன் வரவும்.

கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு மட்டும் சொற்ப இடமிருப்பதால் புதிதாகச் சேர விரும்புவோர் பாஸ்போட் சகிதம் மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

| | |
|---|---|
| LABOURER | — 36 KD |
| CARPENTER | — 45 KD. |
| STEEL WORKER | — 42 KD. |
| MASON | — 42 KD. |
| HEAVY EQUIPMENT OPERATOR | — 60 KD. |
| HEAVY DUTY DRIVER | — 54 KD. |
| MECHANICS | |
| PLUMBER | — 48 KD. |
| ELECTRICIAN | — 48 KD. |
| SECURITY GUARDS | — 45 KD. |

இலவச சாப்பாடு — இலவச தங்குமிட வசதி

★ சவூதி அரேபியாவுக்கு
டாக்டர்கள் உடன் வேலைவாய்ப்பு

நேர்முகப் பரீட்சை — Hotel Inter Continental
சம்பளம் — பேசித் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

அமெரிக்கன் முன்னணிக் கம்பனி

Construction & Development Company Ltd.
37, S. DE. S. JEYASINGHE MAWATTHE,
NUGEGODA.

குடாநாட்டின் ஏகப்பிரதிநிதி;
V.P. பாலா - (V. P. பாலசுப்பிரமணியம்)
C/o- N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 03-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Wednesday June 03, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org